**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, DINDIGUL.**
**Date : 11.06.2026.**
**CC.No. 589/2025**
**அ.சா.1 திரு.கணவாய் பிச்சை.**

(எதிரி ஆஜரில்லை. பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்)

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :–</u>**

எனக்கு எழுத, படிக்க தெரியுமா என்றால், தெரியாது. விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் பதிவு எண் தெரியுமா என்றால், தெரியாது. நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை. விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்று எனக்கு நேரடியாகத் தெரியாது. இறந்துபோன நாகூர் அம்மாளுக்கு சிறு வயதில் இருந்தே மனநல குறைபாடு இருந்தது என்றால் சரியல்ல. அசா.2 எதிரியின் அடையாளம் பற்றி என்னிடம் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரியல்ல. விபத்து ஏற்படுத்திய வேன் யாருக்குச் சொந்தமானது என்று நான் கேட்டுத் தெரிந்து கொண்டேன். அதை போலீசார் விசாரணையில் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான்.

நான் சொன்னவாறு சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் விபத்து நடைபெறவில்லை என்றால் சரியல்ல. அசா.2 எனது மனைவி. அசா.3 எனது மகள். இழப்பீடு பெறும் நோக்கில் எதிரி மீதுபொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. விபத்து நடந்து 2 ¼ மணி நேரம் கழித்துத்தான் புகார் கொடுத்துள்ளேன் என்றால், விபத்து நடந்ததும் நான் போலீசாருக்கு தகவல் கொடுத்துவிட்டேன். விபத்து இறந்துபோனவரின் கவனக்குறைவினால்தான் ஏற்பட்டது என்றால்

சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :– இல்லை.**

**Taken down by me/before me in open court on 11.06.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.**

INBAKARTHICK Digitally signed by INBAKARTHICK Date: 2026.06.11 18:08:50 +0530

**Chief Judicial Magistrate,**

**Dindigul.**

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, DINDIGUL.**
**Date : 11.06.2026.**
**CC.No. 589/2025**
**அ.சா.2 திருமதி.ஹயர் நிஷா.**

(எதிரி ஆஜரில்லை. பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்)

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :–</u>**

இறந்துபோன நாகூர் அம்மாளுக்கு மனநிலை குறைவு இருந்தது என்றால் சரியல்ல, உடல் வளர்ச்சி குறைவு தான் இருந்தது. விபத்தில் எனக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றால் சரிதான். விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் பதிவு எண்ணை நான் போலீசாரிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். விபத்தினால் தண்ணீர் குழாய்க்கோ, குடங்களுக்கோ சேதம் இல்லை என்றால், குடம் நசுங்கிவிட்டது. மேற்படி விபரத்தினை போலீசாரிடம் சொல்லவில்லை என்றால் சரிதான், போலீசார் அது பற்றி கேட்கவில்லை. விபத்து ஏற்பட்ட சமயத்தில் பள்ளி வேனில் நடத்துநர் இல்லை என்றால் சரியல்ல. எதிரி போனில் பேசிக்கொண்டே வாகனத்தை ஓட்டி வந்தாரா என்றால் இல்லை. விபத்தை ஏற்படுத்தியதும் வாகனத்தை விட்டு இறங்கி போன் பேசினார். நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றும், நேரில் பார்த்து இருந்தால் நடத்துநர் பற்றிய விபரங்களை போலீசாரிடம் கூறியிருப்பேன் என்றால் சரியல்ல.

விபத்து ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டியது எதிரி தான் என்பதற்கு, எதிரியின் அங்க அடையாளங்கள் எதுவும் போலீசாரிடம் கூறினீர்களா என்றால் கூறினேன். நான் சொன்னது போல், சொன்ன நேரத்தில்,

சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில் விபத்து நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் அசா.1 ற்கு விபத்து பற்றி தகவல் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரியின் பெயர், விபரங்கள் பற்றி எவ்வாறு தெரிந்து கொண்டேன் என்று போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் வேனில் இருந்த பள்ளி மாணவர்கள் கூறினார்கள். அசா.1 எனது கணவர் என்றும், அசா.3 எனது மகள் என்றால் சரிதான். இழப்பீடு பெறும் நோக்கில் எதிரி மீது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து நடந்த இடத்தில் எதிரியைப் பார்த்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :– இல்லை.**

**Taken down by me/before me in open court on 11.06.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.**

INBAKARTHICK Digitally signed by INBAKARTHICK Date: 2026.06.11 18:08:58 +0530

**Chief Judicial Magistrate,**
**Dindigul.**

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, DINDIGUL.**
**Date : 11.06.2026.**
**CC.No. 589/2025**
**அ.சா.3 திருமதி.மெகராஜ் பானு**

(எதிரி ஆஜரில்லை. பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்)

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :–</u>**

இறந்துபோன நாகூர் அம்மாளுக்கு மனநிலை குறைவு இருந்தது என்றால் சரியல்ல. விபத்தில் எனக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றால் சரிதான். விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் பதிவு எண்ணை நான் போலீசாரிடம் சொல்லவில்லை என்றால் சரியல்ல. விபத்தினால் தண்ணீர் குழாய்க்கோ, குடங்களுக்கோ சேதம் இல்லை என்றால், குடம் நசுங்கிவிட்டது. மேற்படி விபரத்தினை போலீசாரிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். விபத்து ஏற்பட்ட சமயத்தில் பள்ளி வேனில் நடத்துநர் இல்லை என்றால் சரிதான். எதிரி போனில் பேசிக்கொண்டே வாகனத்தை ஓட்டி வந்தாரா என்றால் இல்லை. விபத்தை ஏற்படுத்தியதும் வாகனத்தை விட்டு இறங்கி போன் பேசினார்.

நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றும், நேரில் பார்த்து இருந்தால் நடத்துநர் பற்றிய விபரங்களை போலீசாரிடம் கூறியிருப்பேன் என்றால் சரியல்ல. விபத்து ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டியது எதிரி தான் என்பதற்கு, எதிரியின் அங்க அடையாளங்கள் எதுவும் போலீசாரிடம் கூறினீர்களா என்றால் கூறினேன். நான் சொன்னது போல், சொன்ன

நேரத்தில், சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில் விபத்து நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் அசா.1ற்கு விபத்து பற்றி தகவல் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரியின் பெயர், விபரங்கள் பற்றி எவ்வாறு தெரிந்து கொண்டேன் என்று போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் விபத்து நடைபெற்றதும் எதிரி அங்கு தான் இறங்கி நின்றார். மாணவர்களின் பெற்றோர்களும் அங்கு வந்துவிட்டார்கள். அவர்கள் தான் எதிரியின் பெயர், விலாசம் பற்றி கூறினார்கள். அசா.1 எனது தகப்பனார் என்றும், அசா.2 எனது தாயார் என்றால் சரிதான். விபத்தை நான் நேரில் பார்த்து இருந்தால் உடனடியாக காயம்பட்டவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து, போலீசாருக்கு தகவல் அளித்து இருப்பேன் என்றால், விபத்து ஏற்பட்டதும் எனது அத்தை நாகூர் அம்மாள் பேச்சு, மூச்சு இன்றி இருந்தார், எனது தகப்பானாருக்கு தகவல் தெரிவித்து ஆம்புலன்ஸ் வரவழைத்தோம்.

புகாரை எனது தகப்பனார் தான் கொடுத்தார். அவருக்கு எழுத, படிக்க தெரியாது என்பதால் நான் எழுதிக் கொடுத்தேன். எங்கு வைத்து புகார் எழுதினீர்கள் என்றால் காவல் நிலையத்தில் எழுதினேன். இரண்டு மணி நேரம் காலதாமதமாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, அரசு மருத்துவமனைக்கு அத்தையை தூக்கிச் சென்றோம், அங்கு இறந்துவிட்டதாக கூறியதும் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டோம். எழுதாத வெள்ளைத்தாளில் காவல்நிலையத்தில் கையொப்பம் செய்து கொடுத்துவிட்டு உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இழப்பீடு பெறும் நோக்கில் எதிரி மீது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து நடந்த இடத்தில் எதிரியைப் பார்த்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை :- இல்லை.

Taken down by me/before me in open court on 11.06.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

INBAKARTHICK Digitally signed by INBAKARTHICK Date: 2026.06.11 18:09:06 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, DINDIGUL.**
**Date : 11.06.2026.**
**CC.No. 589/2025**
**அ.சா.4 திரு.சேக் பரித்**

(எதிரி ஆஜரில்லை. பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்)

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :–</u>**

அசா.1 எனது நண்பர் என்றால் சரிதான். நான் போலீசார் கேட்டுக் கொண்டதன் பேரில் பார்வை மகஜரில் சாட்சி கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். நான் கையெழுத்த செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று படித்து பார்த்தீர்களா என்றால் படித்துப் பார்த்தேன். என்னுடன் பார்வை மகஜரில் சாட்சி கையொப்பமிட்ட நபர் யார் என்று முதல் விசாரணையில் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் முகமது மாலிக் ஆகும். அதை முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் அது பற்றி அப்போது கேட்கவில்லை. அசா.1 எனது நண்பர் என்பதாலும், அவருக்கு இழப்பீடு பெற்றுக் கொடுக்கும் நோக்கிலும் உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் காவல் நிலையத்தில் வைத்து எழுதப்படாத வெள்ளைத்தாளில் கையொப்பம் செய்து கொடுத்துவிட்டு தற்போது உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை :– இல்லை.

Taken down by me/before me in open court on 11.06.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

INBAKARTHICK Digitally signed by INBAKARTHICK Date: 2026.06.11 18:09:18 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, DINDIGUL.**
**Date : 11.06.2026.**
**CC.No. 589/2025**
**அ.சா.5 திரு.முகமது மாலிக்.**

(எதிரி ஆஜரில்லை. பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்)

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :–</u>**

அசா.1 எனது நண்பர் என்றால் சரிதான். நான் போலீசார் கேட்டுக் கொண்டதன் பேரில் பார்வை மகஜரில் சாட்சி கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். நான் கையெழுத்த செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று படித்து பார்த்தீர்களா என்றால் படித்துப் பார்த்தேன். என்னுடன் பார்வை மகஜரில் சாட்சி கையொப்பமிட்ட நபர் யார் என்று முதல் விசாரணையில் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சேக் பரித் ஆகும். அதை முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் அது பற்றி அப்போது கேட்கவில்லை. அசா.1 எனது நண்பர் என்பதாலும், அவருக்கு இழப்பீடு பெற்றுக் கொடுக்கும் நோக்கிலும் உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் காவல் நிலையத்தில் வைத்து எழுதப்படாத வெள்ளைத்தாளில் கையொப்பம் செய்து கொடுத்துவிட்டு தற்போது உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் விசாரித்தபோது பார்வை மகஜர் உள்ளதை படித்துப் பார்த்து கையொப்பம் செய்ததாக சொல்லவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :– இல்லை.**

**Taken down by me/before me in open court on 11.06.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.**

INBAKARTHICK Digitally signed by INBAKARTHICK Date: 2026.06.11 18:09:26 +0530

**Chief Judicial Magistrate,**

**Dindigul.**